
# நமது தினகனி
காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI
Daily Morning

Vol : 01 | Issue : 115 | 4 Pages | 28.11.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 115 | 4 பக்கங்கள் | 28.11.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## அமெரிக்காவில் 3 பாலஸ்தீன மாணவர்கள் மீது துப்பாக்கிச்சூடு



வெர்மான்ட், நவ.28

அமெரிக்காவின் வெர்மான்ட் நகரில் 3 பாலஸ்தீன மாணவர்கள் மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த மாணவர்கள், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இருவருக்கு சம்பவ இடத்திலேயே சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் தீயணைப்புத்துறையால் வெர்மான்ட் பல்கலைக்கழக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், மூன்றாவது நபரும் அதே மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமெரிக்க அதிகாரிகளுக்கு பாதிக்கப்பட்ட மாணவர்களின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆயுஷ்மான் பாரத் சுகாதார மையங்களை பெயர் மாற்றம் செய்தது மத்திய அரசு




புதுடெல்லி, நவ.28

ஆயுஷ்மான் பாரத் உடல்நலம் மற்றும் ஆரோக்கிய மையங்களை 'ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்' என பெயர் மாற்றம் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக மத்திய அரசு, 'ஆயுஷ்மான் பாரத்' என்ற மருத்துவ காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன்கீழ், 'ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள்' அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த மையங்களின் பெயரை 'ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்' என்று மாற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த பெயர் மாற்றத்தை அமல்படுத்துமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய சுகாதார அமைச்சகம் கடிதம் எழுதி உள்ளது. பெயர் மாற்றப்பட்ட மையங்களின் புகைப்படத்தை, 'ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள்' இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

## பிரதமர் மோடி திருப்பதி வருகை: ஏழுமலையான் கோவிலில் தரிசனம்



திருப்பதி, நவ.28

தெலுங்கானாவில் தேர்தல் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு பிரதமர் நரேந்திரமோடி நேற்றுஇரவு7.40மணிக்குதிருப்பதிவந்தார்.ரேனிகுண்டா விமான நிலையம் வந்த பிரதமர் மோடியை, ஆந்திர முதல் மந்திரி ஜெகன் மோகன் ரெட்டி, கவர்னர் அப்துல் நசீர் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர்.

பின்னர், விமான நிலையத்தில் இருந்து சாலை மார்க்கமாக காரில் திருமலைக்குசென்றுஅங்குள்ளவிருந்தினர்மாளிகையில்இரவுதங்கினார்.

இந்நிலையில்இன்றுகாலைவிஐபிபிரேக்தரிசனத்தில்ஏழுமலையானை தரிசனம் செய்கிறார். தரிசனம் முடிந்து காலை 10.25 மணிக்கு விமான நிலையம் செல்லும் பிரதமர் மோடி, விமானம் மூலம் டெல்லி செல்ல இருக்கிறார். பிரதமர் மோடி திருப்பதி வருகையையொட்டி, திருப்பதி முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதி வாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்த வேண்டும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, நவ.28

முன்னாள் பிரதமர் சமூக நீதி காவலர் வி.பி.சிங் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் தமிழக அரசு சார்பில் சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் ரூ.52 லட்சம் செலவில் அவருக்குசிலைஅமைக்கப்பட்டுஉள்ளது.

வி.பி.சிங் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி இன்று காலையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

உத்தரபிரதேச முன்னாள் முதல்மந்திரி அகிலேஷ் யாதவ் சிறப்பு விருந்தினராக பங்கேற்க, வி.பி.சிங் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அங்கிருந்த உருவப் படத்துக்கும் மலர் தூவி வணங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வி.பி.சிங் மனைவி சீதாகுமாரி, அவருடைய மகன்கள் அஜயா சிங், அபய்சிங், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, பொன்முடி, எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின், மு.பெ.சாமிநாதன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அதன் பிறகு கலைவாணர் அரங்கில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

நானும் முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கும் 2 முறை சந்தித்துள்ளோம். முதல் சந்திப்பு 1988ம் ஆண்டு தேசிய முன்னணியின் தொடக்க விழா சென்னையில் நடந்தது.

அப்போது இளைஞரணி சார்பில் மாபெரும் ஊர்வலத்தை நான்தான் தலைமை தாங்கி நடத்தி வந்தேன். கிட்டத்தட்ட 2 லட்சம் இளைஞர்கள் பங்கேற்ற அந்த ஊர்வலத்தை இதே அண்ணா சாலையில் காயிதே மில்லத் கல்லூரி பக்கத்தில் மேடை அமைத்து மாலையில் தொடங்கி இரவு வரை வியந்தபடி பார்த்து வாழ்த்தினார் வி.பி.சிங்.

அப்போது நான் அவரிடம் பேச வாய்ப்பு கிடைக்கவில்லை. அடுத்த சந்திப்பு அவர் பிரதமர் ஆன போது டெல்லிக்கு சென்ற எம்.எல்.ஏ.க்கள் குழுவில் நானும் இருந்தேன். அப்போது என்னை அறிமுகம் செய்து வைத்தனர்.

அப்போது வி.பி.சிங் என்னிடம் இவரை எப்படி மறக்க முடியும்? இவர்தான் சென்னையில் இளைஞர் படையை அணிவகுத்து நடத்தினார் என்று மறக்காமல் என்னை பாராட்டினார். அந்த பாராட்டு என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு.

இன்றைக்கு நான் முதலமைச்சராக பொறுப்பேற்று அவருக்கு சிலை திறந்து வைத்துள்ளேன் என்றால் இதைவிட என்ன பெருமை வேண்டும்?

இந்தியா முழுவதும் பரவி உள்ள சமூக நீதி குடும்பத்தை சார்ந்தவர்கள் நாங்கள். வி.பி.சிங்குக்கு சிலை வைப்பதின் மூலம் அவரது புகழ் உயருது. நாம் அவருக்கு காட்ட வேண்டிய நன்றியை காட்டி உள்ளோம்.

காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதி கதவை திறந்து வைத்தவர் வி.பி.சிங். தன்னுடைய பிரதமர் பதவி போனாலும் பரவாயில்லை என்று உறுதியாக இருந்தவர் வி.பி.சிங். அவருக்கு சிலை அமைப்பதை திராவிட மாடல் அரசு தனது கடமையாக கருதுகிறது.

சமூக நீதியை காக்கிற கடமையில் இருந்து இம்மி அளவும் வழுவாமல் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

வி.பி.சிங் பற்றியும் அவரது தியாக வாழ்வு பற்றியும் இந்திய மண்ணில் உள்ள ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்தவர். தன்னுடைய நிலங்களை தானமாக வழங்கியவர்.

வி.பி.சிங் பிரதமராக பதவியில் இருந்தது 11 மாதம்தான். ஆனாலும் அவர் செய்த சாதனை மகத்தானது.

அரசியல் அமைப்பு சட்டம் உருவாக்கப்பட்ட போது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீடு தரப்படவில்லை. அதை வழங்குவதற்காக 2வது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் தான் வி.பி.மண்டல் தலைமையிலான ஆணையம்.

சமூகரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என அழைக்கப்படும் சமூகத்துக்கு மத்திய அரசு பணியிடங்களில் 27 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற வி.பி.மண்டல் பரிந்துரையை அமல்படுத்திய சமூகநீதி காவலர்தான் வி.பி.சிங். வி.பி.சிங் பிறப்பால் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர் அல்ல. ஏன் ஏழை எளிய குடும்பத்தை சார்ந்தவரும் கிடையாது. ஆனாலும் ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இட ஒதுக்கீட்டை சாத்தியப்படுத்தி காட்டினார்.

வி.பி.சிங் சிலையை திறந்ததின் மூலம் நாம் அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

வி.பி.சிங்கின் வாழ்க்கை வரலாற்றை இளைஞர்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். வி.பி. சிங் முயற்சியால் தான் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் ஓரடியாவது முன்னேறி இருக்கிறார்கள். நாம் இன்னும் பல உயரங்களுக்கு செல்ல வேண்டும்.

நமக்கான உரிமைகள் இன்றைக்கும் முழுமையாக கிடைக்காத கிடைக்க முடியாத சூழல்தான் நிலவுகிறது.

சமூக நீதி என்பது ஒரு மாநிலத்தின் பிரச்சனை கிடையாது. எல்லா மாநிலங்களிலும் உள்ள பிரச்சனை. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஜாதி வகுப்பு அளவீடுகள் வேறுபடலாம். ஆனால் பிரச்சனை ஒன்றுதான்.

அதுதான் புறக்கணிப்பு. எங்கெல்லாம் புறக்கணிப்பு, தீண்டாமை, அடிமைத்தனம், அநீதி இருக்கிறதோ அங்கெல்லாம் அதை முறியடிக்கிற மருந்தாக இருப்பது தான் சமூக நீதி. அந்த சமூகநீதி தளைக்க வேண்டுமானால் அதை முன்னெடுக்க வேண்டிய சில முக்கிய செய்திகளை சொல்கிறேன்.

தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பை, அந்த கணக்கெடுப்போடு ஜாதி வாரி கணக்கெடுப்பையும் மத்திய அரசு நடத்த வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்பட வேண்டும். பட்டியலின பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடு முறையாக வழங்கப்பட வேண்டும்.

சிறுபான்மையினர் இட ஒதுக்கீடு முறையாக வழங்கப்பட வேண்டும். இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து உறுதி செய்ய அனைத்துகட்சி எம்.பி.க்கள்கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும்.

இதை அகில இந்திய அளவில் சமூக நீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நன்மைக்காக செயல்பட வேண்டும்.

சமூக நீதி காவலர் வி.பி.சிங் சிலை திறப்பு நாளில் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய உறுதிமொழி.

இந்தியா முழுமைக்கும் வாழும் பிற்படுத்தப்பட்ட பட்டியலின, பழங்குடியின, சிறுபான்மை விளிம்புநிலை மக்களுடைய உயர்வுக்கான அரசியல் செயல்திட்டங்களை அரசியல் செயல் திட்டங்களாக மாற்றி அமைக்க இன்றைக்கு உறுதி ஏற்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.



கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்டம் அவிநாசி ஊராட்சி ஒன்றியம் அனைப்புதூர் ஊராசி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத்திருத்தம் 2024 வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்றுவரும்சிறப்புமுகாமினைபார்வையிட்டுஆய்வுமேற்கொண்டு இளம் வாக்காளர்களுக்கான விண்ணப்பபடிவத்தினை வழங்கினார்.



மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இந்திய அரசமைப்பு முகப்புரை வாசிக்க அனைத்து அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

# விவசாய நிலம் வாங்குவதற்கு தாட்கோ மானியத்துடன் கிரையத் தொகை குறைந்த வட்டியில் கடன்: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.28

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்; (தாட்கோ) மூலமாக விவசாய தொழிலாளர்களை ஊக்குவித்திடும் வகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினை சார்ந்தவர்களுக்கு விவசாய நிலம் வாங்குவதற்கு தாட்கோ மானியத்துடன் கிரையத் தொகையினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் குறைந்த வட்டியில் கடனாக பெற்று வழங்கப்படுகிறது. நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்கள் சமூக பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு அவர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பீட்டின்படி திட்டத் தொகையில் 50மூ அல்லது அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் வரை மானியம் விடுவிக்கப்ப டுகிறது.

இத்திட்டத்தின்கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு 100 சதவீதம் முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் விலக்களிக்கப்படுகிறது.

தற்போது பயனாளிகள் பங்குத்தொகை இல்லாமல் மானியத்தொகை போக எஞ்சிய கிரையத் தொகையினை தேசிய பட்டியலினைத்தோர் நிதி மேம்பாட்டுக் கழக நிதியிலிருந்து பயனாளிகளுக்கு 6 மூ மிக குறைந்த வட்டியில்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடனாக பெற்று நிலம் வாங்குவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினர் தாட்கோ இணையதள முகவரியில் விண்ணப்பம் செய்ய வேண்டும் மேலும் விபரங்களுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தை அணுகி விவரம் பெற்று உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்யலாம்; என மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட மேலாளர் அலுவலகம், தாட்கோ, அறை எண்:501 (ம) 503, 5 வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பல்லடம் ரோடு, திருப்பூர்641 604.தொடர்புக்கு: அலைபேசி எண்: 94450 29552, தொலைபேசி எண்: 04212971112.

# பிரதம மந்திரி பயிர் காப்பீடுத்திட்டம், தோட்டக்கலை பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படுகிறது: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.28

திருப்பூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி பயிர் காப்பீடுத்திட்டத்தின் கீழ் 202324 ஆம் ஆண்டு ராபி பருவ தோட்டக்கலைப் பயிர்களுக்கு காப்பீடு செய்தல் பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய மையமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நடைபெற்று வருகிறது.

தோட்டக்கலைப் பயிர்களை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதிகள் கீழ் கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வ.எண் தோட்டக்கலைப்பயிர்கள் காப்பீடு தொகை (ஏக்கர்1க்கு) (ரூ) காப்பீடு செய்வதற்கான கடைசி நாள் 1. கொத்தமல்லி 622.50 02.01.2024
2. வெங்காயம் 2227.50 31.01.2024
3. மிளகாய் 1257.50 4. தக்காளி 1495.00 5. வாழை
4900.50 29.02.2024 6. மரவள்ளி 1720.00

எனவே, இதுவரை ராபி பயிர்களை காப்பீடு செய்யாத, காப்பீடு செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் பொது சேவை மையங்கள் அல்லது தொடக்க வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கங்களை அணுகி இத்திட்டத்தில் காப்பீடு தொகை செலுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

# விடுதலைப்புலிகள் தலைவர் "பிரபாகரன் என்றாவது ஒரு நாள் வருவார்" வைகோ நம்பிக்கை

சென்னை, நவ.28

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் 69வது பிறந்த நாள் விழா சென்னை பாந்தியன் சாலையில் உள்ள ம.தி.மு.க. தலைமை அலுவலகமான தாயகத்தில் நேற்று நடந்தது. இதில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கலந்து கொண்டு பிறந்த நாள் கேக் வெட்டினார்.

பின்னர் வைகோ நிருபர்களிடம் கூறியதாவது:

பிரபாகரன் என்றாவது ஒரு நாள் வருவார் என்ற நம்பிக்கையோடு அவரது பிறந்தநாளை கொண்டாடுகிறோம்.

நாளை (அதாவது இன்று) மாவீரர் தினம். விடுதலை போரில் தங்கள் இன்னுயிரை இழந்த விடுதலை புலிகளுக்கு வீர வணக்கம் செலுத்துகின்ற நாள்.

மாவீரர்தினம் ம.தி.மு.க தலைமை அலுவலகத்தில் நாளை (இன்று) கடைபிடிக்கப்படுகிறது.

கவிஞர் காசியானந்தன், பழ.நெடுமாறன் ஆகியோர் விடுதலை புலிகளுக்காகவே வாழ்ந்தவர்கள். அதனால் பிரபாகரன் உயிரோடு இருப்பதாக அவர்கள் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் அது மர்மமாகவே உள்ளது.

பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்ற எண்ணத்தோடு செயல்பட்டு கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு வைகோ கூறினார்.

# கோவை மாவட்டத்துக்கு புதிய பா.ஜ.க. தலைவர் நியமனம்: அண்ணாமலை அறிவிப்பு

சென்னை, நவ.28

கோவை மாவட்ட பா.ஜ.க. தலைவர் பதவியில் இருந்து பாலாஜி உத்தம ராமசாமியை விடுவித்து தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக பா.ஜ.க. கட்சியின் கோயம்புத்தூர் நகர் மாவட்ட தலைவராக பணியாற்றி வந்த பாலாஜி உத்தம ராமசாமி, தனது மாவட்டத்தை சிறப்பான முறையில் வழிநடத்தி களப்பணியாற்றி வந்தார். தற்போது சொந்த காரணங்களுக்காக பா.ஜ.க. மாவட்ட தலைவர் பதவியில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கடிதம் கொடுத்துள்ளார்.



அவரது கடிதத்தை ஏற்றுக்கொண்டு அவர் மாவட்ட தலைவர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, மாநில செயற்குழு உறுப்பினராக நியமனம் செய்யப்படுகிறார்.

கோயம்புத்தூர் நகர் மாவட்ட பொதுச்செயலாளராக பணியாற்றி வந்த ஜே.ரமேஷ்குமார், புதிய மாவட்ட தலைவராக நியமனம் செய்யப்படுகிறார்" என்று அதில் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

# தாம்பரம்–நாகர்கோவில் இடையே சிறப்பு ரெயில்: தெற்கு ரெயில்வே அறிவிப்பு

சென்னை, நவ.28

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கூட்ட நெரிசலை தவிர்க்கவும், பயணிகளின் நலனுக்காகவும் ரெயில்வே சார்பில் சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், நாகர்கோவிலில் இருந்து மாலை 4.35 மணிக்கு தாம்பரம் நோக்கி செல்லும் வாராந்திர அதிவிரைவு சிறப்பு ரெயில் (வண்டி எண்.06012) டிசம்பர் 3, 10, 17, 24, 31 மற்றும் ஜனவரி 7, 14, 21, 28 ஆகிய தேதிகளில் புறப்பட்டு மறுநாள் காலை 4.10 மணிக்கு தாம்பரம் சென்றடையும். மறுமார்க்கமாக, தாம்பரத்தில் இருந்து காலை 8.05 மணிக்கு நாகர்கோவில் நோக்கி செல்லும் வாராந்திர அதிவிரைவு சிறப்பு ரெயில் (06011) டிசம்பர் 4, 11, 18, 25 மற்றும் ஜனவரி 1, 8, 15, 22, 29 ஆகிய தேதிகளில் புறப்பட்டு அதேநாள் இரவு 8.45 மணிக்கு நாகர்கோவில் சென்றடையும்.





இதேபோல, திருநெல்வேலியிலிருந்து இரவு 7 மணிக்கு மேட்டுபாலயம் நோக்கி செல்லும் வாராந்திர அதிவிரைவு சிறப்பு ரெயில்(06030) டிசம்பர் 3, 10, 17, 24 ஆகிய தேதிகளில் புறப்பட்டு மறுநாள் காலை 7.30 மேட்டுபாளையம் சென்றடையும். மறுமார்க்கமாக, மேட்டுபாளையத்திலிருந்து இரவு 7.45 மணிக்கு திருநெல்வேலி நோக்கி செல்லும் வாராந்திர அதிவிரைவு சிறப்பு ரெயில்(06029) டிசம்பர் 4, 11, 18, 25 ஆகிய தேதிகளில் புறப்பட்டு மறுநாள் காலை 7.45 மணிக்கு மேட்டுபாளையம் சென்றடையும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சமூக நீதி பேசும் திமுக தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தயங்குவது ஏன்? அன்புமணி ராமதாஸ் கேள்வி

தர்மபுரி, நவ.28

தர்மபுரியில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில் காவிரி உபரி நீர் திட்டம் உள்ளிட்ட நிலுவையில் உள்ள நீர்பாசன திட்டங்களை உடனடியாக தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். தர்மபுரியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைவிடத்தில் தார்சாலை ஒன்று மட்டுமே அமைக்கப்பட்டு உள்ளது. எவ்வித தொழிற்சாலைகளும் இதுவரை வரவில்லை. விவசாய விளை நிலங்களை அழித்து அங்கு தொழிற்சாலைகள் அமைத்து ஏற்படும் வளர்ச்சி தேவையில்லை.

மதுவை டெட்ரா பாக்கெட்டுகளில் விற்பனை செய்யும் தமிழக அரசின் முடிவை உடனடியாக கைவிட வேண்டும். இதனால் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். மதுக்கடைகளை படிப்படியாக குறைத்து பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்று திமுக அறிவித்தது. ஆனால் இதுவரையில் இதை செயல்படுத்தவில்லை. தமிழகத்தில் பல்வேறு வடிவங்களில் கஞ்சா விற்பனை அதிகரித்து வருகிறது.



பீகார் மாநிலத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு 75 சதவீதமாக இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் அனுமதி அளித்துள்ளது. ஆனால் தமிழக அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முடியாது என தெரிவித்துள்ளது. தொடர்ந்து சமூக நீதி குறித்து பேசிவரும் திமுக தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த ஏன் தயங்குகிறது?.

ஆவின் பால் விற்பனை குறித்து பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையானது எனில் அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தனியார் பால் கொள்முதலில் தொடர்ந்து ஊழல் நடைபெற்று வருகிறது. இதை அரசு உடனடியாக தடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு வெள்ளி கருங்காலி மாலை அணிவித்த கே.என்.நேரு

சென்னை, நவ.28

திமுக தலைவரும், முதல் அமைச்சருமான மு.க. ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் சென்னை தியாகராய நகரில் உள்ள தனியார் ஓட்டலில் இன்று நடைபெற்றது. இந்த மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர் பாலு, இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மற்றும் கட்சியின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நிறைவடைந்து வெளியே வந்த அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு, அமைச்சர் கே.என். நேரு வெள்ளி கருங்காலி மாலை அணிவித்தார். கூட்டம் முடிந்து வெளியே வந்த கே.என்.நேருவிடம், அவர் போட்டிருந்த கருங்காலி மாலையைப் பற்றி ஐ.பெரியசாமி கேட்டார். அப்போது தான் அணிந்திருந்த வெள்ளி கருங்காலி மாலையை ஐ.பெரியசாமி கழுத்தில் கே.என்.நேரு போட்டுவிட்டார். அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு, அமைச்சர் கே.என். நேரு கருங்காலி மாலை போட்டு விடும் புகைப்படங்கள் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது.



# பாசனத்திற்கு தண்ணீர் தர மறுப்பது விவசாயிகளுக்கு தமிழக அரசு இழைக்கும் அநீதி: டிடிவி தினகரன் பேச்சு

சென்னை, நவ.28

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்து இருப்பதாவது:

மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் உள்ள பெரியாறு பிரதான கால்வாயின் கீழ் 85 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், திருமங்கலம் பிரதான கால்வாயின் கீழ் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் ஒருபோக பாசன வசதி பெற்று வருகின்றன. பெரியாறு பிரதான கால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசன பகுதிகளுக்கு 900 கன அடி வீதமும் திருமங்கலம் பிரதானகால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசன பகுதிகளுக்கு 230 கன அடி வீதமும் வைகை அணையிலிருந்து கடந்த 15 ஆம் தேதி திறக்கப்பட்ட நீர் 24 ஆம் தேதியுடன் நிறுத்தப்பட்டது.



வைகை அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் குடிநீர் தேவையை மட்டுமே பூர்த்திசெய்ததாகவும், விவசாயத் தேவைக்கு பயன்படவில்லை என அந்நீரை நம்பியிருக்கும் 120 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். பருவமழை பொய்த்த காரணத்தினால் கடந்த ஜூன் மாதம் கள்ளந்திரி இருபோக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படாத நிலையில், தற்போது காலம் கடந்து திறக்கப்பட்டிருக்கும் குறைந்த அளவு தண்ணீரும் விவசாயத்திற்கு போதுமானதாக இல்லை என்பதால் மதுரை மாவட்ட விவசாயிகள் மிகுந்த விரக்தி அடைந்துள்ளனர்.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் மழையாலும் முல்லைப் பெரியாறு அணை நீராலும் வைகை அணை நிரம்பி உள்ளது. கடந்த காலங்களை ஒப்பிடும் போது முல்லைப் பெரியாறு அணையில் 118 அடி நீர் இருப்பு இருக்கும்போது ஒருபோக பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதாகவும், தற்போது முல்லைப் பெரியாறு அணை 137 அடியைகடந்தநிலையிலும் வைகை அணையில் இருந்து தண்ணீரை திறக்க மறுப்பது ஏன்?

இது தொடர்பாக விவசாயிகள் எழுப்பிய கேள்விக்கு மதுரை மாவட்ட ஆட்சியரும், அரசும் உரிய பதிலை வழங்காமல் தண்ணீர் திறக்க மறுப்பதால் விவசாயிகள் ஒன்று திரண்டு போராடும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஏற்கனவே காவிரியில் இருந்து உரிய நேரத்தில் நீரை தமிழக அரசு பெற்றுத் தர முடியாத காரணத்தினால், டெல்டா பகுதியில் லட்சக்கணக்கான ஏக்கர் அளவிலான பயிர்கள் கருகிய நிலையில், ஒருபோக பாசனத்திற்கு தமிழக அரசு தண்ணீர் தர மறுப்பது மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய துரோகம் ஆகும். ஆகவே, பெரியாறு அணையில் போதுமான அளவு நீர் இருந்தும் பாசனத்திற்கு தண்ணீர் தர மறுப்பது விவசாயிகளை வஞ்சிக்கும் செயல் என்பதை உணர்ந்து, மதுரை மாவட்டம் பெரியாறு, திருமங்கலம் பிரதான கால்வாய், மற்றும் உசிலம்பட்டி 58 கிராம பாசனக் கால்வாயில் தண்ணீரை திறந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட வேண்டும் என தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு அதில் தெரிவித்து உள்ளார்.



அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி அணையிலிருந்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக தண்ணீரை திறந்து வைத்தார்கள். உடன் கலெக்டர் கிறிஸ்துராஜ் உள்பட பலர் உள்ளனர்.

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள்: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.28

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் நாட்டிலுள்ள இளைஞர்களிடையே விளையாட்டு மற்றும் உடற்தகுதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, ஒன்றிய அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த விளையாட்டு நிகழ்வாகும். இந்த விளையாட்டு போட்டிகள் 17 வயதுக்குட்பட்ட மற்றும் 21 வயதுக்குட்பட்ட பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஆனால், 2021 ஆம் ஆண்டில் ஹரியானாவில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியில், 18 வயதுக்குட்பட்ட பிரிவிலும் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இதே போன்று 2022 இல் மத்தியப் பிரதேசத்திலும் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023யினை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனைத்தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2023ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாக நடத்திட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 தமிழ்நாட்டில் உள்ள சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நான்கு நகரங்களில் 19.01.2024 முதல் 31.01.2024 வரை நடைபெற உள்ளது. இந்தப் போட்டிகளில் சுமார் 5,000 விளையாட்டு வீரர் வீராங்கனைகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடத்தப்படவுள்ள விளையாட்டுகள் விவரம்:

தடகளம் (Athletics) கால்பந்து (Football) குத்துச்சண்டை (Boxing) வாள்வீச்சு (Fencing) வாலிபால் (Volleyball)

பளு தூக்குதல் (Weightlifting) ஸ்குவாஷ் (Squash) வில்வித்தை (Archery) ஜூடோ (Judo) கட்கா (Gatka)

டேபிள் டென்னிஸ் (Table Tennis) பேட்மிண்டன் (Badminton)

சைக்கிள் ஓட்டுதல் (Cycling) கோகோ (Kho Kho) யோகாசனம் (Yogasana)

மல்யுத்தம் (Wrestling) ஹாக்கி (Hockey) நீச்சல் (Swimming) ஜிம்னாஸ்டிக்ஸ் (Gymnastics)

டென்னிஸ் (Tennis)

துப்பாக்கி சுடுதல் (Shooting) களரிபயட்டு (Kalaripayattu) மல்லக்கம்பு (Mallakhamb) கூடைப்பந்து (Basketball) தாங்தா (Thang Ta) கபடி (Kabbadi) சிலம்பம் (Silambam) (Demo Game) மேலும் நடைபெறவுள்ள கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023ல் கூடைப்பந்து, கபடி, கோகோ, வாலிபால்,

ஹாக்கி மற்றும் கால்பந்து ஆகியவற்றிற்கான குழு விளையாட்டுகளில் தமிழ்நாட்டு அணியும் இடம்பெற உள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் வீராங்கனைகள், அவர்களின் சிறப்பான செயல்திறனின் அடிப்படையில் தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த தேர்வு செய்யப்படுவார்கள். தமிழ்நாட்டு அணிகளில் இடப்பெறுவதற்கான தேர்வு சோதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் நடத்தப்படவுள்ளது.

தேர்வு சோதனைகளின் விவரங்கள்:

வ. எண் விளையாட்டு பாலினம் இடம் நாள் &நேரம்

1. கூடைப்பந்து பெண்கள் ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம், சென்னை. 01.12.2023 காலை 7.00 மணி

ஆண்கள் 02.12.2023 காலை 7.00 மணி

2. கால்பந்து பெண்கள் ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், சென்னை. 30.11.2023 காலை 7.00 மணி

ஆண்கள் 30.11.2023 – காலை 7.00 மணி & 01.12.2023 காலை 7.00 மணி

3. கபடி பெண்கள் மாவட்ட விளையாட்டு வளாகம், நேரு பூங்கா, சென்னை 30.11.2023 காலை 7.00 மணி ஆண்கள் 01.12.2023 காலை 7.00 மணி

4. கோகோ பெண்கள் மாவட்ட விளையாட்டு வளாகம், நேரு பூங்கா, சென்னை. 30.11.2023 – காலை 7.00 மணி ஆண்கள் 01.12.2023 – காலை 7.00 மணி

5. வாலிபால் பெண்கள் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கம், சென்னை. 30.11.2023 காலை 7.00 மணி ஆண்கள் 01.12.2023 காலை 7.00 மணி

6. ஹாக்கி பெண்கள் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கம், சென்னை. 30.11.2023 காலை 7.00 மணி

ஆண்கள் 01.12.2023 காலை 7.00 மணி

தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு திறமை மற்றும் திறன்களை மேம்படுத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் அந்தந்த விளையாட்டுப் பிரிவுகளில் தகுந்த பயிற்சி அளிக்கப்படும்.

பங்கேற்பதற்குத் தகுதி பெற, விளையாட்டு வீரர்கள் வயதுச் சரிபார்ப்பு செயல்முறைக்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் இரண்டினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

☐ ஆதார் அட்டை (அல்லது) பாஸ்போர்ட்

☐ பள்ளிக்கல்விச் சான்றிதழ் (SSLC/10ஆம் வகுப்பு)

☐ பிறப்புச் சான்றிதழ் (குறைந்தது 5 ஆண்டுகளுக்கு முன்பு, மாநகராட்சி அல்லது கிராம பஞ்சாயத்து மூலம் ஜனவரி 1, 2013 அன்று அல்லது அதற்கு முன் வழங்கப்பட்டது)

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர் வீராங்கனைகளும் இத்தேர்வு சோதனைகளில் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.


நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

# கலெக்டர் அலுவலகத்தில் ஆர்.பி.உதயகுமார் 'திடீர்' தர்ணா அ.தி.மு.க.வினர் பங்கேற்பு

மதுரை, நவ.28

மதுரை கலெக்டர் அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் அ.தி.மு.க.வினர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். திருமங்கலம் பிரதான கால்வாய், மேலூர், 58 கிராம பாசன கால்வாயில் தண்ணீர் திறக்கக்கோரி அவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.



இதுகுறித்து ஆர்.பி.உதயகுமார் கூறியதாவது:

திருமங்கலம் தாலுகாவில் பெரியாறுவைகை பாசனதிட்டத்தின்கீழ்திருமங்கலம் பிரதான கால்வாய் மூலம் விவசாய பணிகள்நடைபெற்றுவருகின்றன. வைகை அணையில் 6 ஆயிரம் மில்லியன் கனஅடி தண்ணீர் இருக்கும்போது திருமங்கலம் பகுதிகளுக்கு செப்டம்பர் 15ந்தேதி முதல் தண்ணீர் திறப்பது வழக்கமான ஒன்று. மதுரை மாவட்டத்தில் பேரணை முதல் கள்ளந்திரி வரையான இருபோக பாசனத்திற்கான 45 ஆயிரம் ஏக்கர், மேலூர் ஒருபோக பாசனத்திற்கான 85 ஆயிரம் ஏக்கர், திருமங்கலம் ஒருபோக பாசனத்திற்கான 19 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பிற்கு தண்ணீர் திறக்க விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.

ஆனால் தற்போது கள்ளந்திரி பகுதியில் மட்டும் தண்ணீர்திறக்கப்பட்டு விவசாய பணிகள் நடைபெற்று வருகிறது. வைகை, முல்லை பெரியாறு அணைகளின் மொத்த நீர் இருப்பு 6 ஆயிரம்மில்லியன்கனஅடியை தாண்டினாலேகள்ளந்திரி, மேலூர், திருமங்கலம் ஆகிய 3 பகுதிகளுக்கும் சேர்த்தே பாசனத்திற்கு தண்ணீர்திறக்கப்படுவது வழக்கமான ஒன்றாக இருந்து வருகிறது.

முன்னாள் முதல்வர்கள் ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆட்சிகாலத்தில் 58 கிராம பாசன கால்வாய்திட்டத்திற்கு தேவையான நிதி முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டு 2018ம் ஆண்டு முதல் முறையாக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

இந்திட்டம் உசிலம்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள 36 கண்மாய்கள், 110 கிராமங்கள் மற்றும் 5 ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெறும் வகையில் மிகப்பெரிய நிலத்தடி நீர் ஆதாரமாகவும் விளங்குகிறது. விவசாயம், குடிநீர், கால்நடை தேவைக்கும் நீர் ஆதாரமாக இருந்து வருகிறது.

தற்போது போராட்டம் நடத்தி வருகிற பாசன விவசாயிகளின் தொடர் போராட்டத்திற்கு தீர்வு காணும் வகையிலும், பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்கவும் மதுரை மாவட்ட கலெக்டர் திருமங்கலம் பிரதான கால்வாய், மேலூர், 58 கிராம பாசன கால்வாய்களில் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மின்சாரம் தாக்கி 10 வயது காட்டு யானை உயிரிழப்பு

ஒசூர், நவ.28

ஒசூர் அருகே தேன்கனிக்கோட்டை அடுத்துள்ள தாவரக்கரை கிராமத்தில் ஒருவரை சேர்ந்த பால்நாராயணன்என்பவர் கோழி பண்ணை நடத்தி வருகிறார். இந்த கோழி பண்ணையில் உள்ள ஒரு மின்சார கம்பத்தில் இருந்து அருகில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை போர்வெல்லுக்கு தரை வழியாக மின்சார ஒயர் கொண்டு செல்லப்பட்டுள்ளது. நொகனூர்வனப்பகுதியில் இருந்து இரவு நேரத்தில் உணவு தேடி வெளியேறிய பத்துக்கும் மேற்பட்ட காட்டு யானைகள் கோழிப்பண்ணை அருகே வந்துள்ளன. அப்போது ஆழ்துளை போர்வெல்லுக்கு கொண்டு செல்லப்பட்ட மின்சார கம்பி ஒரு யானையின் கால்களில் சுற்றி உள்ளது. அப்போது யானை அந்த மின்சார கம்பியை கடித்ததில்சம்பவஇடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தது மற்ற யானைகள் அங்கிருந்து காட்டுப்பகுதிக்கு சென்று விட்டன. காட்டு யானை உயிரிழந்தது குறித்து அறிந்த தேன்கனிக்கோட்டை வனத்துறையினர் அப்பகுதிக்கு சென்று விசாரணை நடத்தினர். அப்போது உயிரிழந்த காட்டு யானை, பெண் யானை என்பதும் சுமார் 10 வயது மதிக்கத்தக்கது என்பதும் தெரியவந்தது. தொடர்ந்து இது குறித்து வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பள்ளி முடிந்து வீடு திரும்பிய சிறுமி பேருந்து சக்கரத்தில் சிக்கி உயிரிழந்த பரிதாபம்

நீலகிரி, நவ்.28

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே தனியார் பள்ளி பேருந்தில் சிக்கி எல்கேஜி படிக்கும் சிறுமி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.




நீலகிரி மாவட்டம் கூக்கல்தொரை பகுதியில் பேருந்தில் இருந்து இறங்கிய சிறுமி லயா பேருந்தின் பின்புறமாக நடந்து சென்றுள்ளார்.

அதனை அறியாத ஓட்டுநர் பேருந்தை பின்புறமாக இயக்கியபோது டயரில் சிக்கி சிறுமி உயிரிழந்தார்.

சிறுமியின் உடலை மீட்ட கோத்தகிரி போலீசார், தப்பியோடிய ஓட்டுனர் தியாகராஜனை தேடி வருகின்றனர்.

# 93,000 நாய்களுக்கு தடுப்பூசி சென்னை மாநகராட்சி திட்டம்

சென்னை, நவ.28

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சுமார் 93,000 நாய்களுக்கும் வெறிநாய் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணியை நீக்குவதற்கான மருந்தையும் ஊசி மூலம் செலுத்த சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

தெரு நாய்கள் வலை மூலம் பிடிக்கப்பட்டு கால்நடை மருத்துவரால் தடுப்பூசிகள் விட முடிவு செய்யப்படுகிறது.

தடுப்பூசி போடப்பட்டு பின்னர் அதே தெருவில்


தடுப்பூசி செலுத்திய நாய்களை அடையாளம் காணும் வகையில் அவைகளின் உடலில் ஒரு பகுதிகளில் வண்ணம் தீட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.



# பழவேற்காடு முகத்துவாரத்தில் சுவர் கட்ட தேசிய வனவிலங்கு வாரியம் ஒப்புதல்: அதிகாரி தகவல்

பொன்னேரி, நவ.28

பழவேற்காடு ஏரி இந்தியாவின் மிகப்பெரிய இரண்டாவது உவர்ப்பு நீர் ஏரி ஆகும். இதனை நம்பி சுற்றி உள்ள ஏராளமான மீனவ கிராமமக்கள் மீன்பிடித்து வருகிறார்கள். பழவேற்காட்டில் கடலும் ஏரியும் சந்திக்கும் இடமான முகத்துவாரம் வழியாக மீனவர்கள் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வருகின்றனர். 150க்கும் மேற்பட்ட வகையான மீன்கள், இறால், நண்டுகள் கிடைத்து வருகின்றன.



தினமும் 6மணி நேரத்திற்கு ஒருமுறை கடல் நீர் ஏரிக்கும் அடுத்த ஆறு மணி நேரம் ஏரி நீர் கடலுக்கும் செல்லும். அப்போது கடல் வாழ் உயிரினங்கள் நீர் ஏற்றத்தின் போது ஏரிக்குள் நுழைவதும் இனப்பெருக்கம் செய்து விட்டு கடலுக்குள் வெளியேறுவதும் இயற்கையாக நடக்கும் நிகழ்வு ஆகும். இந்நிலையில் பழவேற்காடு முகத்துவாரத்தில் கடல் மண் சேர்ந்து அடைப்பு ஏற்பட்டுள்ளது .இதனால் கடல் நீர் ஏரிக்கும் ஏரி நீர் கடலுக்கும் செல்வது தடைபட்டதோடு ஏரியின் ஆழம் குறைந்து காணப்படுகிறது.

இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இதையடுத்து பழவேற்காட்டில் நிரந்தர முகத்துவாரம் அமைக்க ரூ.27 கோடியில் திட்டமிடப்பட்டு பூமி பூஜை போடப்பட்டது. ஆனால் மத்திய வனவிலங்கு துறை அனுமதி கொடுக்காததால் பணிகள் தொடர்ந்து நடைபெறவில்லை. இதனால் தற்போது முகத்துவார பகுதி முழுவதும் மணலால் அடைபட்டு மீனவர்கள் செல்ல முடியாத நிலை உள்ளது.

இதற்கிடையே பழவேற்காடு முகத்துவார பகுதியில் கற்கள் கொட்டி முகத்துவார சுவர் கட்ட மத்திய வனவிலங்கு வாரியம் அனுமதி அளித்து இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த 17ந்தேதி டெல்லியில் நடைபெற்றதேசியவனவிலங்கு வாரிய கூட்டத்தில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டு இருப்பதாக தெரிகிறது. முகத்துவாரத்தின் இருபுறமும் தலா 160 மீட்டர் மற்றும் 150 மீட்டர் என 2 சுவர்களைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருப்பதாக கூட்டத்தில் பங்கேற்ற அதிகாரி ஒருவர் தெரிவித்து உள்ளார்.

எனவே விரைவில் பழவேற்காடு முகத்துவார பணி தொடங்கப்படும் என்று தெரிகிறது. இதுகுறித்து மீனவர்கள் கூறும்போது, முகத்துவாரத்தில் ஏற்பட்ட அடைப்பு காரணமாக நீரோட்டம் பாதிக்கப்பட்டு உள்ளது. நீர் பரிமாற்றம் இல்லாததால், கடல் உயிரினங்கள் முட்டையிட ஏரிக்கு வராததால் மீன்பிடித்தல் குறைந்து வருகிறது. முகத்து வார பணியை விரைவில் தொடங்கி முடிக்க வேண்டும் என்றார்.

# தமிழகத்தில் பரவும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தத் தவறிய விடியா திமுக அரசு: எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சென்னை, நவ.28

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,



தமிழகம் முழுவதும் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருவதையும், சுமார் இரண்டு மாதங்களில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், ஒருசில உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டு, இனியாவது இந்த விடியா திமுக அரசும், சுகாதாரத்துறையும் விழித்துக்கொண்டு தமிழகம் முழுவதும் அம்மாவின் ஆட்சியில் நடத்தியதைப் போன்று காய்ச்சல் முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்களை நடத்தி, நோய்களைக் கண்டறிந்து அவற்றை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, 30.7.2023, 29.9.2023 ஆகிய தேதிகளில் வெளியிட்டுள்ள எனது அறிக்கைகள் மற்றும் பேட்டிகளின் வாயிலாக விடியா திமுக அரசை வலியுறுத்தி இருந்தேன்.

ஆனால், விடியா திமுக அரசின் சுகாதாரத்துறை அமைச்சர்எப்போதும்போல்தனதுதுறைசரியாகசெயல்படுவதாக பேட்டி அளித்துவிட்டு, பெயரளவிற்கு ஓரிரு நாள் மட்டும் காய்ச்சல் முகாம்களை நடத்திவிட்டு, மாரத்தான் போட்டிகளை நடத்துவதற்கு சென்றுவிட்டார். நேற்று (26.11.2023), மதுரை மாநகராட்சிப் பகுதியில் 1 வயது குழந்தை, 2 சிறுவர்கள் உள்ளிட்ட 4 பேர்; புறநகர்பகுதிகளில் 5 சிறுவர்கள் உள்ளிட்ட 9 பேர் என்று மொத்தம் 13 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும், மதுரை மாவட்டம் முழுவதும் டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிய வருகிறது. இதேபோன்று நேற்று, ஒரே நாளில் மதுரையில் 67 பேர்சாதாரணகாய்ச்சலால்பாதிக்கப்பட்டுசிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்; மாவட்டம் முழுவதும் சாதாரண காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருவதாகவும்; கடந்த 30 நாட்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சாதாரண காய்ச்சல் பாதிப்புக்கு ஆளாகி உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேபோல், புதுக்கோட்டையில் ஓரிரு நாளில் புதிதாக 59 பேருக்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும், இதுவரை காய்ச்சலால் 229 பேர் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும், ஏற்கெனவே, டெங்கு காய்ச்சலுக்கு சிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தமிழகத்தில் நிலவும் அவலங்களை சுட்டிக்காட்டும் போது, அதிலுள்ள உண்மைகளை புரிந்துகொண்டு, தமிழக மக்களின் நலன் சம்பந்தமான நடவடிக்கைகளை உடனடியாக செயல்படுத்த வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கும், விடியா திமுக அரசுக்கும் உண்டு.

ஆனால், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அள்ளி வழங்கி, பின்புற வாசல் வழியாக பதவியேற்ற இந்த விடியா திமுக அரசின் முதலமைச்சரும், அமைச்சர்களும், எப்போதும் போல், எனது தலைமையிலான அரசில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை தாங்கள் செய்ததாக ஸ்டிக்கர் ஒட்டி விளம்பரப்படுத்துவதிலேயே உள்ளனர்.

உதாரணமாக, சென்னை மத்திய கைலாஷ் அருகில் உள்ள சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 2019ஆம் ஆண்டு எனது தலைமையிலான ஆட்சியில் சுமார் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 'யு' வடிவ பாலங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 2 வருடங்களில் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டிருந்தது. கொரோனா தொற்றால் இப்பணி தாமதமாகியது. ஆனால், இந்த விடியா அரசு பதவியேற்று 30 மாதங்கள் கழித்து, சென்ற வாரம்தான் இரு பாலங்களில் ஒன்றை மட்டும் திறந்து வைத்து, தங்கள் ஆட்சியில் செய்ததாக ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டுள்ளது. மற்றொன்றை எப்போது கட்டி முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வருவார்கள் என்று, அப்பகுதியில் பயணம் செய்யும் மக்கள் ஏக்கத்துடன் காத்துக்கொண்டுள்ளனர்.

இந்த விடியா அரசின் குறைகளை எனது அறிக்கைகள் மூலம் குறிப்பிட்டு வெளியிடுகிறேன். எனவே, நான் அறிக்கைகளில் சுட்டிக்காட்டிய குறைகளை உடனடியாகக் களைய இந்த விடியா திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# உதயநிதி புகழ் பரப்பும் 'மாமன்னா' பிரசார பாடல் தா.மோ.அன்பரசன் வெளியிட்டார்

சென்னை, நவ.28

தி.மு.க. இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 46வது பிறந்த நாள் விழாவை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் 1 மாதம் விளையாட்டு போட்டிகள் நடத்தி, நலத்திட்ட உதவிகள் வழங்க ஏற்பாடு செய்து உள்ளார்.




இதையொட்டி நேற்று ஆலந்தூரில் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற கைப்பந்து போட்டியை தொடங்கிவைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப் பரிசு மற்றும் கோப்பைகளை பரிசாக வழங்கினார்.

இதன் பிறகு தி.மு.க. இளைஞரணி மாநாட்டுக்காக கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்டு வந்த மோட்டார் சைக்கிள் வாகன பேரணியை வரவேற்று வழியனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழ்பாடும் 'மாமன்னா' பிரசார பாடலையும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டார்.

பம்மல் நகர இளைஞரணி நிர்வாகி ராஜசேகர் உருவாக்கிய இந்த பாடல் இப்போது மக்கள் மத்தியில் பிரபலமாகி வருகிறது.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் இந்த பாடலை வெளியிட்டதும் வாட்ஸ் அப், யூ டியூப்பில் மாமன்னா பாடல் வைரலானது.

# பிளாஸ்டிக் குடோனில் தீவிபத்து: ரூ.50 லட்சம் மதிப்பிலான பிளாஸ்டிக் பொருட்கள் எரிந்து நாசம்

தருமபுரி, நவ.28

தருமபுரி மாவட்ட கலெக்டர் குடியிருப்புக்கு பின்புறம், ஒட்டப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் நாகேந்திரன் என்பவர் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் நேற்றிரவு பிளாஸ்டிக் தொழிற்சாலையில் திடீரென தீப்பற்றி எரிய தொடங்கி உள்ளது. இதனை அருகே இருந்தவர்கள் பார்த்து தருமபுரி தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத்துறையினர் 3 தீயணைப்பு வாகனங்களில் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தும், தீ கட்டுக் கடங்காமல் மளமளவென எரிந்தது. பின்னர், அரூர், பென்னாகரம், பாலக்கோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கூடுதலாக தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கபட்டு கொளுந்து விட்டு எரிந்த தீயை தீயணைப்பு மற்றும் மீட்பு படை வீரர்கள் போராடி அணைத்தனர். மேலும், தீ விபத்து நிகழ்ந்த பிளாஸ்டிக் கம்பெனி அருகில் தனியார் பேட்டரி கம்பெனி, லாரி பார்க்கிங் உள்ளிட்டவைகள் இருப்பதால் அங்கு தீ பரவாத வண்ணம் தீயணைப்பு வீரர்கள்முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டனர். தீ விபத்தில் அதிர்ஷ்டவசமாக ஊழியர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்த தீ விபத்தில் சுமார் 50 லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து அதியமான்கோட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து தீ விபத்து காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் தருமபுரியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

# கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: ரசாயன கலவையுடன் நுரை பொங்க துர்நாற்றத்துடன் வெளியேறும் தண்ணீர்

ஓசூர், நவ.28

கர்நாடகமாநிலத்தில் தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதிகளான பெங்களூர் புறநகர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக ஓசூர் கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இன்றைய நிலவரப்படி, முழு கொள்ளளவான 44.28 அடியில், நீர் இருப்பு 24.44 அடியாக உள்ளது. கடந்த சில மாதங்களாக கெலவரப்பள்ளி அணையில் ஷட்டர் மதகுகள் மற்றும் பராமரிப்பு காரணமாக பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், அணையில் நீர் தேக்கி வைக்கப்படுவதில்லை. இதனால் தொடர்ந்து அணைக்கு வரும் நீர் அப்படியே திறந்து விடப்பட்டு வருகிறது. நேற்று வினாடிக்கு 1,234 கனஅடி நீர் வந்தது. இன்றும் அதேஅளவு தண்ணீர் அணைக்கு வந்தது. அணையின் பாதுகாப்பு கருதி, வினாடிக்கு 1,120 கனஅடி நீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டது.

இதனிடையே பெங்களூர் புறநகர் பகுதிகளில் இயங்கி வரும் தொழிற்சாலைகளின் ரசாயனகழிவுகள் மற்றும் அந்த பகுதிகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் கலப்பதால் அணைக்கு வரும் வரும் நீர், ரசாயன கலவையுடன் நுரையும் நுங்குமாக துர்நாற்றத்துடன் பொங்கி வருகிறது.

அதேபோல அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரும், நுரை பொங்கி செல்வதால் அப்பகுதி விவசாயிகள் வேதனைஅடைந்து உள்ளனர். கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரித்திருப்பதால், தென்பெண்ணை ஆற்றங்கரையோரத்தில் உள்ள சுமார் 20க்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 28.11.2023



# நான் நடிகை ஆவேன் என்று நினைக்கவில்லை... ராஷ்மிகா மந்தனா பேட்டி

ரன்பீர் கபூர் ராஷ்மிகா மந்தனா நடித்துள்ள 'அனிமல்' படம் அடுத்த மாதம் 1ம் தேதி இந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என பான் இந்தியா படமாக வெளியாகிறது. இதனையொட்டி இன்று சென்னையில் இப்படத்தை விளம்பரப்படுத்த செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் ரன்பீர் கபூர், ராஷ்மிகா மந்தனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பில் நடிகை ராஷ்மிகா மந்தனா பேசியதாவது:

"பெரிய நடிகர்களின் படங்களில் நான் இருப்பதற்கு எந்த வித ரகசியமும் இல்லை. ஒரு படத்தில் நடிப்பதற்கு முன்பு அந்த படத்தின் கதையை கேட்பேன். இயக்குநரை நம்புவேன், அதற்குமேல் என் கையில் எதுவுமில்லை. நான் நடிகை ஆவேன் என்று கூட நினைக்கவில்லை. எனக்கு இதுபோன்ற பெரிய நடிகர்கள் உடன் நடிப்பது பெருமையான விஷயம்.

தற்போது மிகப்பெரிய நபர்களுடன் மேடையில் அமர்ந்துள்ளேன். இதுவே எனக்கு பெருமையாக இருக்கிறது. என்னை பொறுத்தவரையில் எனக்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புகளுக்கும் நான் ஆசிர்வதிக்கப்பட்டவளாக நினைக்கிறேன்." இவ்வாறு அவர் பேசினார். .

# கூச முனிசாமி வீரப்பன் சீரிஸின் டிரைலர் வெளியானது



வீரப்பன், என்கவுண்டரில் தனது முடிவை சந்தித்தார். 'கூச முனிசாமி வீரப்பன்' சீரிஸானது டிசம்பர் 8ஆம் தேதி வெளியாகுகிறது.

மூன்று தசாப்தங்களாக தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரளாவின் அடர்ந்த காடுகளை வேட்டையாடிய மிகப்பிரபலமான நபரான வீரப்பன், சிறப்பு அதிரடிப்படையின் (STF) என்கவுண்டரில் தனது முடிவை சந்தித்தார். இவரது வாழ்க்கை கதை 'கூச முனிசாமி வீரப்பன்' என்ற டாக்குமெண்ட்ரி சீரிஸாக உருவாகியுள்ளது.

இந்த சீரிஸ் வனக் கொள்ளைக்காரன் கூஸ் முனிசாமி வீரப்பனின் வாழ்க்கை மற்றும் அவரது குற்றச் சரித்திரம் பற்றிய நெருக்கமான பார்வையை வழங்குகிறது. நிஜ வாழ்க்கைக் காட்சிகள் மற்றும் அவருக்கு நெருக்கமான நபர்கள் மற்றும் அவரைப் பிடிக்க அயராது முயன்ற அதிகாரிகளின் நேரடி வாக்குமூலங்கள் ஆகியவற்றின் மூலம், இந்த சீரிஸ் உருவாக்கப்பட்டுள்ளது.

'கூச முனிசாமி வீரப்பன்' சீரிஸானது டிசம்பர் 8 முதல் தமிழ், கன்னடம், இந்தி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் ஜீ5 ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளது. இந்நிலையில் இந்த சீரிஸின் டிரைலர் வெளியாகி சமூக வலைதளத்தில் ரசிகர்களின் கவனம் ஈர்த்து வருகிறது.

# புதிய அவதாரம் எடுத்த நயன்தாரா வைரலாகும் புகைப்படம்

நடிகைநயன்தாராபலமுன்னணிநடிகர்களுடன்நடித்துள்ளார். 'ஜவான்'திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

தமிழ் திரையுலகின் பிரபல நடிகையான நயன்தாரா, ரஜினி, விஜய், சூர்யா என பல நடிகர்களுடன் நடித்து முன்னணி நடிகையாக வலம் வருகிறார். இவர் தமிழ் மட்டுமல்லாமல் மலையாளம், இந்தி என பல மொழி திரைப்படங்களிலும் நடித்து வருகிறார். ஷாருக்கானுடன் இவர் இணைந்து நடித்திருந்த 'ஜவான்' திரைப்படம் பாக்ஸ் ஆபீஸில் வரவேற்பை பெற்று ரூ.1000 கோடிக்கு மேல் வசூல் செய்தது.

நயன்தாராபிரபல இயக்குனரானவிக்னேஷ்சிவனைதிருமணம்செய்துகொண்டார். இவர்களுக்கு வாடகைத் தாய் மூலம் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன. தொடர்ந்து குழந்தைகளை கவனித்து வரும் நயன்தாரா நடிப்பு மற்றும் பிசினஸ் இரண்டிலும் ஆர்வம் காட்டி வருகிறார்.

இந்நிலையில், நடிகை நயன்தாரா சமூக வலைதளத்தில், படப்பிடிப்பு தளத்தில் கேமராவுடன் படம் இயக்குவது போன்ற ஒரு புகைப்படத்தை பகிர்ந்து, "புதிய தொடக்கத்தை நம்புங்கள்" என்று பதிவிட்டுள்ளார். இதற்கு ரசிகர்கள் நயன்தாரா இயக்குனர் அவதாரம் எடுத்துள்ளதாக கமெண்ட் செய்து வருகின்றனர்.

# விசித்ராவுக்கு நடந்ததுபோல எனக்கும் நடந்துள்ளது' காதல் பட நடிகை பரபரப்பு புகார்




நடிகை விசித்ரா சினிமாவில், தான் எதிர்கொண்ட கசப்பான அனுப வங்களை சமீபத்தில் பிக்பாஸ் நிகழ்ச்சியில் பகிர்ந்தார். அவர் அப்போது, 'நான் படத்தில் நடித்து கொண்டி ருந்தபோது தெலுங்கு ஹீரோ ஒருவர் என்னை அவரது அறைக்கு அழைத்தார். மேலும் படப்பிடிப்பில் சண்டை இயக்குனர்ஒருவர்என்னிடம் தவறாக நடந்துகொண்டார்' என்று பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இந்த விவகாரம் சமூக வலைதளங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவருக்கு ஆதரவாக பலதரப்பினரும் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் காதல், பேராண்மை உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமான நடிகை சரண்யாவும் விசித்ராவைப்போல் பாலியல் தொல்லைகளை எதிர்கொண்டதாக குற்றம் சாட்டி உள்ளார்.

இதுகுறித்து சமீபத்திய பேட்டி ஒன்றில் சரண்யா கூறும்போது, "பாலியல் சம்பந்தப்பட்ட பிரச்சினையை உடனடியாக சொல்ல வேண்டும். பல ஆண்டுகள் கழித்து சொல்ல வேண்டிய அவசியம் என்ன? என்று சிலர் விமர்சிக்கிறார்கள். பெரிய பிரபலமாக இல்லாதபோது ஒரு நடிகை சொல்லும் எதுவும் இங்கே எடுபடாது.

நடந்த அநியாயத்தை பற்றி வெளியே சொல்ல பெயர், புகழ், அதிகாரம் தேவைப்படுகிறது. விசித்ரா விஷயத்தில் இத்தனை ஆண்டுகள் கழித்து அவர் சொல்வதில் தவறு இல்லை. சினிமாவில் ஆணாதிக்கம் நிறைய இருக்கிறது. இங்கு பெண்களுக்கான பிரச்சினைகளை பார்க்க மாட்டார்கள். அதுவும் சம்பந்தப்பட்டவர் பெரிய ஹீரோ என்பதால் என்னவென்று கூட கேட்க மாட்டார்கள்.

எனக்கும் இதுபோல நிறைய பிரச்சினைகள் வந்திருக்கின்றன. இதையெல்லாம் தாண்டித்தான் வந்திருக்கிறேன். எனது பிரச்சினையை பற்றி பேசியிருந்தால் காது கொடுத்து கூட கேட்டிருக்க மாட்டார்கள். நல்ல நிலைமைக்கு வந்தால் மட்டும்தான் நமது குரல் அனைவருக்கும் கேட்கும்.

இங்கு கலையை நேசிக்காமல், சினிமாவை போதையாக நினைப்பவர்கள் மட்டும்தான் பெண்களை மோகப்பொருளாக பார்ப்பார்கள். இதை பெண்கள் தாண்டி வருவது பெரிய கஷ்டம். சினிமாவில் சொல்லப்படாத கதை இன்னும் ஆயிரம் இருக்கிறது'' என்றார்.

# "இதுதான் நான் சொல்ல விரும்பும் விஷயம்" ஞானவேல் ராஜா கருத்துக்கு சுதா கொங்கரா மறுப்பு



இயக்குநர்அமீர்மற்றும்தயாரிப்பாளர்ஞானவேல்ராஜாஇருவருக்கும்நீண்டகாலமாக பருத்தி வீரன் படம் தொடர்பாகப் பிரச்சனை நடந்து வருகிறது. இது தொடர்பாக சமீபத்திய பேட்டியில் பேசிய ஞானவேல் ராஜா, அமீர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் வைத்தார். இதையடுத்து அதை மறுத்து அமீர் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்த பிரச்சனையில் தயாரிப்பாளர் ஞானவேல் ராஜாவுக்கு ஆதரவாக திரைத்துறையை சேர்ந்த சிலரும், இயக்குனர் அமீருக்கு ஆதரவாக சிலரும் தங்களின் கருத்துக்களை சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இதற்கிடையே ஒரு பேட்டியில் தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா, 'நான் இயக்குனர் சுதா கொங்கரா மற்றும் நடிகர் கார்த்தியுடன் இணைந்து 'ராம்' திரைப்படம் பார்க்க சென்றேன். அப்போது சுதா கொங்கரா ராம் படத்தின் மேக்கிங் சரியில்லை என்று என்னிடம் சொன்னார்' என்று பேசியிருந்தார்.

இந்நிலையில் அந்த கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கும் விதமாக சுதா கொங்கரா தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில் அவர், 'பிப்ரவரி 2, 2016, இயக்குனர் அமீர் அண்ணாவிடமிருந்து எனக்கு ஒரு போன் வந்தது. நான் பிரசாத் ஸ்டுடியோவிற்கு வெளியில் வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். எனக்கு அது நன்றாக நியாபகம் இருக்கிறது, ஏன் என்றால், இறுதி சுற்று படத்திற்காக எனக்கு முதல் முதலாக திரையுலகில் இருந்து போன் செய்து பாராட்டிய சிலரில் அவரும் ஒருவர். நான் ஒரே ஒரு விஷயம்தான் அவரிடம் சொன்னேன். என் படத்தில் வந்த மதியின் கதாப்பாத்திரம் முத்தழகின் பாதிப்புதான் என்று.

ஒரு ஆணின் எழுத்துக்களில் ஒரு பெண் கதாப்பாத்திரம் இவ்வளவு முழுமையாக எழுதப்பட்டது அதுவே முதல் முறை என்றும் அவரிடம் சொன்னேன். நான் என் படத்தில் மதி மற்றும் பொம்மி கதாபாத்திரங்களில் நடித்த நடிகைகளிடம் பருத்தி வீரன் படத்தை பார்த்துவிட்டு வருமாறு தான் சொல்லி அனுப்பினேன். அதுதான் தமிழ் சினிமாவில் தடம் பதித்த மிகச்சிறந்த ஓர் இயக்குனருக்கு நான் செய்யும் மரியாதை... இதுதான் நான் சொல்ல விரும்பும் விஷயம்.. நன்றி' என்று பதிவிட்டுள்ளார்.

# இது வெறும் வெளிச்சம் அல்ல தரிசனம்.. காந்தாரா புதிய அறிவிப்பு



காந்தாரா திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது.

கடந்த ஆண்டு சிறிய பட்ஜெட்டில் தயாராகி அதிக வசூல் குவித்து திரையுலகினரையும் ரசிகர்களையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்த கன்னட படம் காந்தாரா. இப்படத்தின் மிகப்பெரிய வெற்றியைத் தொடர்ந்து தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளிலும் 'காந்தாரா' டப்பிங் செய்து வெளியிடப்பட்டு வசூலை அள்ளியது.

ரூ.8 கோடி செலவில் தயாரான 'காந்தாரா' திரைப்படம் ரூ.400 கோடிக்கு மேல் வசூலை குவித்தது. இப்படத்தை ரிஷப் ஷெட்டி இயக்கி கதாநாயகனாக நடித்து இருந்தார். இதையடுத்து இப்படத்தின் இரண்டாம் பாகம் சீக்வலாக இல்லாமல், ப்ரீக்வலாக உருவாக உள்ளதாக தயாரிப்பாளர் தெரிவித்திருந்தார். இதையடுத்து இப்படத்தின் அப்டேட்டிற்காக ரசிகர்கள் காத்திருந்தனர்.

இந்நிலையில், 'காந்தாரா பாகம்1' திரைப்படத்தின் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் 27ஆம் தேதி நண்பகல் 12.25 மணிக்கு வெளியாகும் என படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. மேலும், இந்தபோஸ்டரில் 'இது வெறும் வெளிச்சம் அல்ல தரிசனம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'ஜோ' படக்குழுவை நேரில் அழைத்து பாராட்டிய சிவகார்த்திகேயன்



அறிமுக இயக்குனர் ஹரிஹரன் ராம் இயக்கத்தில் ரியோ ராஜ் கதையின் நாயகனாக நடித்துள்ள திரைப்படம் 'ஜோ'. இந்த படத்தில் மாளவிகா மனோஜ் மற்றும் பவ்யா ட்ரிகா கதாநாயகிகளாக நடித்துள்ளனர். மேலும் சார்லி, அன்பு தாசன், ஏகன், கெவின் ஃபெல்சன், ப்ரவீனா மற்றும் பலர் நடித்துள்ளனர்.

அதிக எதிர்பார்ப்பு இல்லாமல் வெளியான 'ஜோ' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. படத்தை பார்த்த பலரும் ரியோ ராஜ் தனது சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளதாகவும் படம் சிறப்பாக உள்ளதாகவும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் 'ஜோ' படக்குழுவை நேரில் அழைத்து நடிகர் சிவகார்த்திகேயன் பாராட்டி உள்ளார். அந்த புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ள நடிகர் ரியோ ராஜ், 'நீங்கள் தொடக்கத்தில் நம்பிக்கையை கொடுத்தீர்கள். எங்கள் முயற்சியின் போது ஊக்குவித்தது, தற்போது வெற்றிக்கு பிறகு இந்த பாராட்டு. எப்போதும் எங்களுடன் இருப்பதற்கு நன்றி அண்ணா' என்று பதிவிட்டுள்ளார்.



# சீனா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் இறுதிப்போட்டி: சாத்விக் சிராக் ஜோடி போராடி தோல்வி

சீனா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி அங்குள்ள ஷின்சென் நகரில் கடந்த ஒரு வாரமாக நடந்து வந்தது. இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் நேற்று நடந்த மகுடத்துக்கான இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி சிராக் ஷெட்டி கூட்டணி, 'நம்பர் ஒன்' ஜோடியான சீனாவின் லியாங் வெய் கெங் வாங் சாங் இணையை எதிர்கொண்டது. அனல் பறந்த போட்டியின் முதல் செட்டை சீன ஜோடியும், 2வது செட்டை இந்திய இணையும் கைப்பற்றியது. 3வது செட்டில் தொடக்கத்தில் லியாங் வாங் கூட்டணியின் கை ஓங்கியது. ஒரு கட்டத்தில் 2013 என்ற கணக்கில் வெற்றியின் விளிம்புக்கு வந்தனர். அதன் பிறகு சரிவில் இருந்து ஆக்ரோஷமாக எழுச்சி பெற்ற சாத்விக் சிராக் தொடர்ச்சியாக 6 புள்ளிகளை சேகரித்து 1920 வரை நெருங்கி வந்தனர்.

இதனால் எதிர் ஜோடி பதற்றத்திற்குள்ளான நிலையில் சமன் செய்வதற்கு வாய்ப்புக்குரிய புள்ளியில் பந்தை இந்திய வீரர்கள் வலையில் அடித்து வெற்றியை கோட்டை விட்டனர். 1 மணி 11 நிமிடங்கள் நீடித்த ஆட்டத்தின் முடிவில் சாத்விக் சிராக் ஷெட்டி ஜோடி 1921, 2118, 1921 என்ற செட் கணக்கில் போராடி தோல்வியை தழுவியது. இந்த சீசனில் 6 இறுதிப்போட்டியில் ஆடியுள்ள சாத்விக் சிராக் அதில் சந்தித்த முதல் தோல்வி இதுதான்.


# ஐபிஎல் 2024: சென்னை அணியில் தக்கவைக்கப்பட்டுள்ள வீரர்கள் விபரம்



2024ம் ஆண்டு ஐபிஎல் தொடருக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் 19ம் தேதி நடைபெற உள்ளது. ஏலத்திற்கு முன்பாக அணிகள் தங்களின் வீரர்களை பரிமாற்றிக்கொள்ளலாம். மேலும், வீரர்களை தங்கள் அணியில் இருந்து விடுவிக்கலாம்.

இந்த நிலையில் அணிகள் தக்கவைத்த மற்றும் விடுவித்த வீரர்களின் பட்டியல் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை அணி 8 வீரர்களை விடுவித்துள்ளது. பென் ஸ்டோக்ஸ், டுவைன் பிரிட்டோரியஸ், பகத் வர்மா, சுப்ரான்ஷு சேனாபதி, அம்பதி ராயுடு, கைல் ஜேமிசன், ஆகாஷ் சிங், சிசண்டா மகலா ஆகிய 8 வீரர்களை சென்னை அணி விடுவித்துள்ளது. மேலும், டோனி, டிவான் கான்வே, ருதுராஜ் கெய்க்வாட், ரஹானே, ஷாய்க் ரஷீத், ரவீந்திர ஜடேஜா, மிட்செல் சான்ட்னெர், மொயீன் அலி, ஷிவம் துபே, நிஷாந்த் சிந்து, அஜய் மாண்டல், ஹேங்கர்கேகர், தீபக் சாஹர், தீக்ஷனா, முகேஷ் சவுத்ரி, பிரசாந்த் சோலங்கி, சிம்ரன்ஜீத் சிங், துஷர் தேஷ்பாண்டே, பதிரானா ஆகிய வீரர்கள் தக்கவைக்கப்பட்டு உள்ளனர்.

# 2019ல் தோனியை ரன்அவுட் செய்ததற்காக தற்போதும் என்னைத் திட்டி மெயில்கள் வருகிறது: மார்ட்டின் கப்டில்





2019 உலகக்கோப்பையின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா நியூசிலாந்து அணிகள் மோதின. இந்த போட்டியில் இந்திய அணியின் தோல்விக்கு கடைசி கட்டத்தில் தோனி ரன் அவுட் ஆனது ஒரு காரணமாக சொல்லப்படுகிறது. தோனியை மார்ட்டின் கப்டில் ரன் அவுட் ஆக்கியிருப்பார். இந்த நிலையில், தோனியின் ரன் அவுட் குறித்து தற்போது மார்ட்டின் கப்டில் பேசியதாவது;

"தோனி அடித்த பந்து மேலே செல்வதைப் பார்த்தது மட்டுமே எனக்கு நினைவிருக்கிறது. அப்போது அந்த பந்து என்னை நோக்கி ஒருவிதமாக வந்தது. பந்தை பிடிப்பதற்கு வேகமாக ஓடினேன். அப்போது பந்தை ஸ்டம்ப்களில் எறிவதற்கான வாய்ப்பு இல்லை என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் ஒன்றரை ஸ்டம்புகள் மட்டுமே என் பார்வைக்கு தெரிந்தன. இருப்பினும் நான் ஸ்டம்பை நோக்கி அடிக்க முயற்சித்தேன். எனக்கு அதிர்ஷ்டம் கிடைத்தது. அந்த கனத்தில் துல்லியமாக பந்து ஸ்டம்பை அடித்தது. இதனால், நூலிழையில் தோனி ரன் அவுட் ஆனார்.

மேலும் அதை பற்றி கூறவேண்டுமானால், அந்த ரன் அவுட் நடந்ததற்கு பிறகு மொத்த இந்தியாவிற்கும் என்னை பிடிக்கவில்லை. இந்திய ரசிகர்களிடம் இருந்து தற்போது வரையிலும் எனக்கு ஏராளமான வெறுப்பூட்டும் மின்னஞ்சல்கள் வருகின்றன" இவ்வாறு கப்தில் கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.